# கிராமத்தின் யதார்த்தம் கிராமராஜ்யம்

**முனைவர் பா.லயோலா சூலியட் மேரி**
**உதவிப் பேராசிரியர், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**
**தமிழ் உயராய்வு மையம், மதுரை – 18.**

41

**ஆய்வுச் சுருக்கம்**

கலையும் இலக்கியமும் ஒரு காலத்தில் கைக்குள் அகப்படாத காவியமாகத் திகழ்ந்தது. பின் கலை கலைக்காகவே, கருத்துக்காகவே, மக்களுக்காகவே என்ற மாற்றம் மக்களிடையே மிளிர்ந்தது. ஒரு படைப்பு ஒரு செய்தியை மட்டுமே அறிவுறுத்துவதில்லை. சில படைப்புகள் எண்ணிலடங்கா சிந்தனைகளை நம்முள் விதைத்துச் செல்கின்றன. இவ்வுலகில் மனித சமுதாயம் மகிழ்வும் சோதனைகளும் நிறைந்தது. இதில் நிரந்தரமானது எதுவும் இல்லை. சில வேளைகளில் மனிதன் சூழ்நிலைகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்கிறான். சிலர் சாதகமான சூழலிலும் தன்நிலை மாறாது அறவாழ்வினையே கடைபிடிக்கின்றனர். இவை குறித்த விழிப்புணர்வினை கோமல் சுவாமிநாதனின் கிராமராஜ்யம் நமக்கு அளிக்கிறது.

**திறவுச் சொற்கள்**

கோமல் சுவாமிநாதன் - கிராம ராஜ்யம் - மூடநம்பிக்கை – சாதிவேறுபாடு – பாலியல் வன்கொடுமை – காதல் - ஊழல் - கல்வி

**முன்னுரை**

கோமல் சுவாமிநாதனின் கிராம ராஜ்யம் என்னும் நாடகம் போராட்ட வகை இலக்கியமாகவும் சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டுவதோடு அவர்களின் உறவு நிலைகளையும் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. போலித்தனமான காட்சிகளின்றி காதல் காட்சிகள் கலைநயத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. சாதிய வேறுபாடுகளும் மூடநம்பிக்கைகளும் களையப்பட்டு ஒரு சிறந்த உறவு நிலை மிளிர்வதாக நாடகம் அமைக்கப்பட்டிருக்கிறது. கலையையும் இலக்கியத்தையும் நேசிக்கத் தூண்டும் மிகச்சிறந்த காவியமாக இந்நாடகம் அமைகிறது. கிராமராஜ்யத்தில் இடம்பெறும் ஆண், பெண் கதாபாத்திரங்கள் தங்களின் பணியினைச் செவ்வனே ஆற்றியிருக்கின்றனர்.

**சமுதாயம்**

மனித சமுதாயத்தின் தொன்மையான நிறுவன அமைப்பிற்கு ஆதாரமாகவும் காலம், இடம் கடந்து உலகம் முழுவதும் சமுதாயம் என்ற அமைப்பில் முக்கிய இடத்தினைப் பெறவும் குடும்பமே உதவுகிறது. “ குடும்பம் என்பது சமூகத்தின் மூலக்கூறு. குடும்பமே சமூகத்தின் வளர்ப்புப் பண்ணை, நாற்றங்கால் என்று கில்பர்ட் பாஸ்கல் குறிப்பிடுகிறார்.”(1) - மக்கள் கூடி வாழும் இடமே சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. காரணம,; குடும்பம் இன்றி சமூகம் அமையாது. ஆதிமனிதர்கள் தங்களுக்கென்று ஒரு குடும்ப வாழ்க்கையை ஏற்படுத்தி அதன் அடிப்படையிலேயே கூடி வாழும் தன்மையினை ஏற்படுத்திக் கொண்டனர். அதனாலேயே சமுதாயம் என்ற ஓர் அமைப்பு உருவானது. “

ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்று கூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறிக்கும்" (2) என வாழ்வியல் களஞ்சியம் விளக்கம் அளிக்கிறது. கிராம ராஜ்யம் நாடகத்தில் இடம்பெறும் அனைவரும் ஒரே குடும்பமாகவும் ஊர் முன்னேற்றத்திற்காகவும் கோவில் கட்டுவதற்காகவும் கருவச்சியிடம் குறி கேட்கும் பொழுதும் அனைவரும் இணைந்து செயல்படுவது அவர்களின் ஒற்றுமை உணர்வினை வெளிப்படுத்துகிறது.

**பொருளாதாரச் சிக்கல்**

சமூகத்தில் பல்வேறு குடும்பங்களில் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதுவே குடும்பத்தில் பல்வேறு பிரச்சனைகள் உண்டாகக் காரணமாக அமைகிறது. "பொருளாதாரம் என்பது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். எல்லாவற்றிற்கும் பொருள் மூலதனமாக அமைகிறது" (3) வறுமை தொன்றுதொட்டு சமுதாயத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு நோயாகத் திகழ்கிறது. இந்நாடகத்தில் ஏவுகணை பரிசோதனைக்காக ஊரைக் காலி செய்யாத மக்கள் அரசாங்கத்தால் அளிக்கப்படும் பணத்திற்காக ஊரைக்காலி செய்ய ஒப்புக் கொள்வது அவர்களின் பொருளாதார நிலையினைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஆலங்குளத்தில் உள்ள போஸ்ட் ஆபீசில் ஸ்டாம்ப் கூட இல்லாமல் இருப்பதும் அதை வாங்க ஒருவர் மட்டுமே இருப்பதும் அவர்களின் பொருளாதார நிலையை உணர்த்துகிறது.

**மூடநம்பிக்கை**

மூடநம்பிக்கை சமுதாயத்தில் பரவியிருக்கும் நச்சுக்கொடி. வேப்பமரத்தில் பால்வடிவது அறிவியல் தொடர்பானது என தினகரன் கூறுவதை ஊர்மக்கள் ஏற்க மறுக்கின்றனர். ஏவுகணை பரிசோதனையின் போது கருவச்சியிடம் குறிகேட்டு ஊரைக்காலி செய்யலாம் என்றும் அவள் மறுத்தால் ஊரைக்காலி செய்யாமல் இறந்தாலும் ஊரிலேயே இறக்கலாம் எனவும் அதற்குக் கருவச்சிக்குக் கள் வாங்கித் தந்து குறி கேட்பதும்; நாடகம் உணர்த்துகிறது.

**சாதி**

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவரின் கூற்றுக்கு இணங்க, செய்கின்ற தொழிலால் மட்டுமே மக்களிடையே மாறுபாடு உள்ளதே தவிர பிறப்பால் மனிதரிடையே வேறுபாடுகள் கிடையாது. ஆதி மனிதனிடம் பேதமில்லை. ஆனால் மொழிக் கலப்பாலும், நாகரிகக் கலப்பாலும் வேற்றுமை உணர்ச்சி மனிதனிடம் கால் கொள்ளலாயிற்று. "மனிதனின் சிறிய உள்ளம் இன்று பெரிய போர்க்களமாகக் காட்சி தருகிறது"(4) என செ.கணேசலிங்கம் கூறுகிறார். கதைநாயகி நவநீதா, தினகரனைத் திருமணம் செய்ய விரும்பியபோது ஊர் பெரியவரான பாலுச்சாமித்தேவர் மறுத்ததற்கான முதல் காரணம், சாதி மட்டுமே. தினகரன் நல்லவன் என அறிந்தாலும் சாதி மட்டுமே இங்கு முதன்மையாகக் கருதப்பட்டது.

**தீண்டாமை**

'ஓட்டடா ஓட்டடா நாட்டை விட்டு ஓட்டடா தீட்டடா மனிதருக்குள் தீண்டல் என்ற தீமையே' 'ஓடும் உதிரத்தில் வடிந்தொழுகும் கண்ணீரில் தேடிப்பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ அப்பா' என்ற ஆசிய

ஜோதி செய்தி அனைத்து சாதியச் சிந்தனைக்கும் சவுக்கடி அளிக்கிறது. இருப்பினும் சாதிய உணர்வு மேலோங்கி வருவது அவமானத்திற்கு உரியது என்பது மிகையில்லா கருத்து. நாடகத்தில் இடம்பெறும் கணபதி சமூக அறிவுடையவராகவும் ஊர் பெரியவர் பாலுச்சாமித் தேவரின் முடிவுக்கு அவர்கள் வசிக்கும் தெருவிலே வசிப்போர் அனைவரும் உடன்படுவர் என்று கூறுவதும் அவர்களின் புரிதலை உணர்த்துகிறது. தங்கள் பிரிவைச் சார்ந்த கருவச்சி பாலுச்சாமித்தேவரின் தந்தையால் கற்பழிக்கப்பட்டது தெரிந்தும் அவர்கள் அது குறித்து எங்கும் முறையிடவில்லை. இருப்பினும் பாலுச்சாமித் தேவரோ அவருடன் இருப்பவர்களோ காலனிக்காரர்கள் என்று அழைக்கப்படும்; இவர்களை ஒதுக்கித்தான் வைத்துள்ளனர். சுடுகாடு, பொதுப்பாதை, நல்லதண்ணி இவைகளுக்கு அனுமதி மறுக்கப்படுவதோடு, குட்டையில் தேங்கிக் கிடக்கும் தண்ணீர் மட்டுமே குடிக்க அனுமதி அளித்தனர் என்பதும் சமூக அவலத்தின் உச்சமாகக் கருதலாம்.

**ஊழல்**

ஏவுகணை பரிசோதையின் போது அரசாங்கம் மக்களுக்கு முறையாக அளிக்கும் பணத்தில் சரிபாதியினை அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் சுருட்டிக் கொள்ளத் திட்டமிடுகின்றனர். ஆலங்குளம் கிராமத்திற்கு தாசில்தார் ஏவுகணை பரிசோதனை குறித்து கிராம மக்களுக்கு விளக்கம் அளிக்க வரும் நேரத்தில் கூட வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களிடம்; இளநீர் வெட்டி வரச் சொல்வதும் அதிகாரிகளின் பண்பினை விளக்குகிறது “அன்னியர்கள் எங்களைச் சுரண்டிய போது ஆவேசப்பட்டோம். இப்போது சொந்த தேசத்தார் சுரண்டுகிற போது சும்மாயிருக்கிறோம்” (5) என மு.மேத்தா குறிப்பிடுவதன் வழி ஊரில் மழையின்றி வறட்சி நிலவுவதும், சரியான சாலை வசதியோ, பள்ளியோ, மருத்துவமனைகளோ இல்லாமல் இருப்பதைத் தாண்டி வாக்காளர்பட்டியலில் இவர்களின் பெயர்களே இல்லை என்பது அரசியல்வாதிகள் ஊழலில் திளைத்திருப்பதை புலப்படுத்துகிறது. ஓட்டுக் கேட்பதற்காக ஊர்களுக்குள் ஆயிரம் முறை வலம்வரும் அரசியல்வாதிகள் தேர்தல் முடிந்ததும் மக்களைத் திரும்பிக் கூடப்பார்ப்பதில்லை’ என்ற கூற்று மெய்யானது.

**கள்ளுண்ணாமை**

‘குடிப்பதைத் தடுப்பதே கோடி கோடி புண்ணியம்; அடிப்பினும் பொறுத்து நாம் அன்பு கொண்டு வெல்லுவோம்’ என அறிவுரை கூறும் நாமக்கல்லார் குடி மக்களை வதைத்திடும். மனைவியை உதைத்திடும். அது பாடுபட்ட கூலியைப் பறித்திடும். மெய் தளர்ந்து மேனி கெட்டுக் கை கால்கள் நடுங்கச் செய்வதும் குற்றமிலாதவர்கள் கொலைகாரராவதும் கத்திக் குத்து சண்டைகளும் கள்ளால் மலிந்தன என்கிறார். இந்நாடகத்தில் தொடக்கத்தில் ஆலங்குளத்தில் மதுவிலக்கு இருந்த போதும், பின்னர் ஊரைக்காலி செய்ய வேண்டிய நிலை வந்த போது அவர்களின் தேவைக்காகக் கருவச்சிக்குக் கள் குடிக்கக் கொடுப்பதும் அதனால் அவள் புத்தி பேதலித்துப் பேசியதற்கும்; நவநீதாவிடம் திருமணம் குறித்துப் பேசியதற்கும் அவள் குடித்த கள்ளே காரணமாக அமைகிறது.

**பாலியல் வன்கொடுமை**

சமூகத்தில் பெண்களுக்கு எதிராகப் பல்வேறு கொடுமைகள் இருந்தாலும் அதிக அளவில் பல்வேறு

இடங்களில் நடக்கக் கூடியவை பாலியல் வன்கொடுமை ஆகும். பாலியல் வன்கொடுமையால் பெண்கள் மட்டுமல்ல குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றனர். " ஒரு ஆண் பெண்ணை விருப்பத்திற்கு மாறாகத் தன்னுடன் உறவு கொள்ள அவளைக் கட்டாயப்படுத்தினால் அது பாலியல் பலாத்காரம்" என சட்டம் வரையறுக்கிறது. (6) "பெண்ணை அவளுடைய உடற்கூறு, மென்மைப்பண்பு இவற்றைக் கொண்டு துன்புறுத்தி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது ஆணினுடைய மேலாதிக்கத்தையே காட்டுகிறது." (7) என்கிறார் கே.உமாபதி. ஆலங்குளம் கிராமத்தில் பாலுசாமித் தேவரின் தந்தையால் கருவச்சி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை அறிந்தும் சாதிய வேறுபாட்டால் அதை யாரிடமும் கூறாமல் அவள் பித்துப் பிடித்து அலைவதை அறிந்தும் அவர் அதை மறைக்கிறார். சிறுவயதிலேயே பாலியல் வன்முறைக்கு ஆளான கருவச்சி இறுதி வரை தன்நிலை உணராமலேயே வாழ்கிறாள். மேலும் பாலுச்சாமித் தேவரின் மனைவி தாயம்மா ஆலங்குளத்தில் வாழும் ஆண்களின் வக்கிரபுத்தியினையும் கூறுவதன்வழி ஆண்களின் குணங்களை விளக்குகிறார்.

**அறியாமை**

சேமிப்பிற்காக அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட தபால் அலுவலகம் குறித்தத் தெளிவு இன்மையும் கடன் வாங்க மட்டுமே அவை உள்ளன என்பதும் ஆலங்குலம் மக்களின் அறியாமையாகும். இந்திய இராணுவம் ஏவுகணை பரிசோதனை மேற்கொள்வது குறித்தும் அதனால் ஏற்படும் விளைவுகளை அறியாதவர்களாகவும் இருக்கின்றனர்.

**இனியவை கூறல்**

நமது கருத்தினைப் பிறருக்கு உணர்த்த உதவும் சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கூற வேண்டும். மோளக்கருப்பன் கதைத் தொடக்கத்தில் தினகரனிடம் பேசுவது நகைச்சுவையாக இருப்பினும் நவநீதா குறித்துக் கூறுவதும் கள்ளுண்பதற்காகப் பொய் பேசுவதும் அவனது பண்பினை விளக்குகிறது. தினகரனிடம் வரம்புமீறிப் பேசுவது, ஒவ்வொருவரும் பேச வேண்டிய முறையினையும், ஆத்திரம் அறிவுக்கு எமன் என்பதையும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது இதனை 'இனிய உளவாக இன்னாத கூறல்... சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் ...' என்ற குறள்கள் வழி வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். ஆலங்குளத்தை விட்டு வெளியேறாத பாலுச்சாமித்தேவர் நவநீதாவின் சொற்களுக்குக் கட்டுப்படுதல் சொற்களின் வலிமையை விளக்குகிறது.

**கல்வி**

நவநீதா தினகரனிடம் தன் காதலைக் கூறும் பொழுதும், ஊர் மக்களுக்காக தினகரன் அதைத் தவிர்ப்பதும் அவர்களின் புரிதலை உணர்த்துகிறது. தன்னைவெட்டிய மச்சக்காளையையும் தினகரன் மன்னித்தது அவனின் பண்பினைப் புலப்படுத்துகிறது. நவநீதாவின் தந்தையும் சாதிப்பாகுபாடின்றித் தன் மகள் விரும்பிய தினகரனைத் திருமணம் செய்ய சம்மதம் அளிப்பது அவரின்; கல்வி அறிவினைப் புலப்படுத்துகிறது. தினகரன் ஆலங்குளத்து மக்களுக்கு சேமிப்பின் அவசியத்தை உணர்த்தியதும் தனது நண்பனின் வழி மக்களுக்கு முறையாகச் சேர வேண்டிய பணத்தைப் பெற்றுத் தருவதற்கும் கல்வியே காரணமாக அமைந்தது என்பதன் வழி ஆசிரியர் கல்வியின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

**தொகுப்புரை**

சமுதாயத்தின் பிரதிநிதியாக வாழும் மனிதர்கள் தங்களின் வாழ்க்கை அனுபவத்தை இலக்கியமாகப் படைக்க முற்பட்டுள்ளனர். தமிழிலக்கிய வளர்ச்சியில் காலந்தோறும் புதிய இலக்கியவகைகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இவ்வாறு தோன்றும் இலக்கியங்கள் அவ்வப்பகுதி மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை நிலைகளை அடிப்படையாகக் கொண்டே வெளிவருகின்றன. இலக்கியம் படைப்பதற்கான காரணங்கள் பல இருந்த போதும் அவற்றுள் முக்கியமானதாகக் கருதப்படுவது வாழ்க்கை குறித்த படைப்பாளியின் பார்வையே ஆகும். படைப்பாளர்கள் மக்களின் வாழ்க்கை முறையில் அமைந்துள்ள உண்மை நிகழ்வுகளையே படைப்பாக அளிக்கின்றனர். கிராமராஜ்யம் நாடகத்தில் படைக்கப்பட்டுள்ள ஆண் கதை மாந்தர்களைவிட பெண் கதை மாந்தர்கள் முற்போக்குச் சிந்தனை உடையவர்களாகப் படைக்கப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது. சமூகச் சிந்தனையை வளர்க்கும் கிராமராஜ்யம் நாடகம் போற்றுதலுக்குரியது.

**அடிக்குறிப்புகள்**

1. கில்பர்ட் பாஸ்கல், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்,( தமிழாக்கம் ஜெ.நாராயணன்), ப.121.
2. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி எட்டு, ப.469
3. இரா.வெங்கடேசன், சேரன் கவிதைகளில் சமூகப் பிரச்சனைகள், ப.78
4. கணேசலிங்கம்,செ., இரண்டாவது சாதி, ப.143
5. மு.மேத்தா, முகத்துக்கு முகம், ப.21
6. கே.உமாபதி ,எது பலாத்காரம்? தினமணி மகளிர் மலர்,97,ப.55
7. மேலது., ப.55

**துணைநூற்பட்டியல்**

1.உமாபதி,கே.(க.ஆ) எது பலாத்காரம்? தினமணி மகளிர் மலர், தினமணி பிரஸ், மார்ச்,1997. சென்னை.

2.கணேசலிங்கம்,செ., இரண்டாவது சாதி, குமரன் பதிப்பகம், சென்னை,முதல் பதிப்பு, 1993

3.கில்பர்ட் பாஸ்கல்., சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், (தமிழாக்கம் ஜெ.நாராயணன்),

தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, பதிப்பு, 1964
4.மேத்தா,மு., முகத்துக்கு முகம்
திருமகள் நிலையம், சென்னை, ஜீலை,2007
5.வேங்கடேசன்,இரா., சேரன் கவிதைகளில் சமூகப் பிரச்சனைகள்
எம்ஃபில் பட்ட ஆய்வேடு,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1986, மதுரை -21